**பல்கலைக்கழக சேமலாப நிதியம் - 2016**

---

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உப பிரிவு மற்றும் 2015 இன் 1 ஆம் இலக்க பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் நெறிவழிகாட்டியின் 24 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 பெறவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 44,126,524 தொகையான சேமலாப நிதியத்தின் செயற்பாடற்ற அங்கத்தவர் மீதியில் உடன்படிக்கை மீறிய அங்கத்தவர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த மீதியும் உள்ளடங்கியிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,792,683,501 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,544,644,089 ஆனமையால் முன்னைய ஆண்டுகள் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 248,039,412 தொகையான அதிகரிப்பொன்று அவதானிப்பட்டது. மீளாய்வாண்டின் போது முதலீட்டு வருமானம் ரூபா 174,309,903 ஆல் அதிகரித்தமை மற்றும் வருமான வரிச் செலவினம் ரூபா 74,399,450 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட மிகை அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

கடந்த 05 வருடங்களின் நிதி விளைவுகளை கருத்திற்கொள்ளும் போது அது ஒரே சீரான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வருமான வரிக்கான சீராக்கங்களின் பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் பங்களிப்பு ரூபா 2,850,171,996 ஆக இருந்தது. அது முன்னைய ஆண்டின் பங்களிப்புடன் ஒப்பீடு செய்த போது 6 சதவீத அதிகரிப்பாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1982 பெப்ரவரி 02 ஆந் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் உயர்கல்வி அமைச்சினால் அதில் சேவையாற்றிய, சேவையை பூர்த்திசெய்த ஊழியர்களின் சேமலாப நிதியத்தின் மீதியை விடுவிப்பதற்கு உரிய விபரங்கள் 02 மாதங்களுக்குள் ஆணைக்குழவின் செயலாளருக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் அந்த நடவடிக்கைகள் நிறுவனத்தின் தவறின் காரணமாக தாமதமடைந்ததன் அடிப்படையில் பங்களிப்பாளர்களுக்கு வட்டி செலுத்த வேண்டி ஏற்படுமாயின் அதனை உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு மிகைக்கட்டணமாக விதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் தாமதக் காலம் 04 மாதங்கள் முதல் 252 மாதங்கள் வரையான விரிவடைந்திருந்த போதிலும் அந்த தாமதக் காலத்திற்காக செலுத்தப்பட்ட வட்டி

ரூபா 110,805 ஆக இருந்த போதிலும், சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சேவையைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களின் நிதியை விடுவிக்கும் போது பல்கலைக்கழகத்தினால் குறித்த காலத்தில் கோவை சமர்ப்பிக்காமையினால் இவ்வாறு கொடுப்பனவுகள் தாமதமடைந்தற்காக பிரதானமாக தாக்கமளித்திருந்ததுடன் ஆணைக்குழவின் தாமதத்தையும் தவிர்த்துக்கொள்வதற்கு சரியான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட கடன் தொடர்பாக 2007 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவின் 739 ஆவது குழுக்கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நிதியத்திலிருந்து கடன் வழங்குவதற்காக கடன் பணம் விண்ணப்பித்த உத்தியோகத்தர்களின் கடன் பணம் விண்ணப்பித்த மாதத்திற்கு முந்திய மாதத்தின் சேமலாப பங்களிப்புப் பணம் மற்றும் முன்னைய மாதக் கடன் தவணை, கடன் விண்ணப்பித்த மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் காசுப் பிரிவிற்கு நிதி கிடைக்கப்பெற வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் கிடைத்திராத சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டத. அந்த தாமதம் தொடர்பாக சபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரம் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **இணங்காமைகள்** |
|---|---|
| நிதிய முகாமைத்துவம் | (i) சேவையைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களின் சேமலாப நிதியை விடுவிப்பதில் தாமதம்.<br>(ii) மாதாந்த கடன் தவைணப் பணம் மற்றும் ஊழயர் சேமலாப நிதிய பங்களிப்பை அனுப்பிவைப்பதற்கு தாமதமடைந்தமை. |